# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8051866

1. District : விழுப்புரம் மாவட்டம் | PS: ஊ.த.க. பிரிவு காவல்நிலையம் | Year: 2023 ஆண்டு | FIR No.: 04 மு.த.அ. எண் | Date: 24.08.2023 நாள்

2. (i) Act சட்டம்: PC Act 1988 as amended by — Sections பிரிவுகள்: u/s 7

   (ii) Act சட்டம்: Prevention of Corruption (Amendment) Act 2018 — Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்: r/w 102 Cr.P.C

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from : 23.08.2023 நாள் முதல் — Date to : 24.08.2023 நாள் வரை

   Time Period : நேர அளவு — Time from : 19.40 மணி நேரம் முதல் — Time to : 07.15 மணி. நேரம் வரை

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 24.08.2023 — Time : 15.30 மணி. நேரம்

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் — Time : நேரம்

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — கணினி தட்டச்சு மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 33 கி.மீ வடகிழக்கு திசையில்

   Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி சார்பதிவாளர் அலுவலகம், மயிலம், திண்டிவனம் வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் இரா. சுமித்ரா — (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் இராஜேந்திரன்

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு — (d) Nationality : நாட்டினம் — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் மாவட்ட துணை ஆய்வு குழு அலுவலர் — (g) Address : முகவரி கடலூர்

   கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   1) P.S. சங்கீதா, உதவியாளர், பொறுப்பு சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், மயிலம், திண்டிவனம் வட்டம், விழுப்புரம் மாவட்டம். 2) R. பாலமணிகண்டன் 3) S. ராஜேந்திரன், அலுவலக உதவியாளர் 4) சுரேஷ் 5) விஜய் ஆனந்த் 6) விநாயகம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   தாமதமில்லை.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

———

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு ———

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் ———

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்படுகிறது. அம்மா, நான் இன்று 24.08.2023ந் தேதி சுமார் 09.00 மணியளவில் நிலைய அலுவலில் இருந்தபோது விழுப்புரம், கடலூர் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்களின் துணை ஆய்வுக்குழு அலுவலர் திருமதி.இரா.சுமித்ரா, என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று இன்று 24.08.2023, 15.30 மணிக்கு விழுப்புரம் ஊ.த.க பிரிவு குற்ற எண் 04/2023/AC/VPM u/s 7(a) of The Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 r/w 102 Cr.P.C. ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. வாதி கொடுத்த புகார் மனுவின் விபரம், அனுப்புநர், இரா.சுமித்ரா, மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டம், கடலூர். பெறுநர், காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விழுப்புரம். ந.க.எண்:அ/622/2023, நாள்:24.08.2023. பொருள்:திடீர் ஆய்வு - விழுப்புரம் மாவட்டம் - மயிலம் சார் பதிவாளர் அலுவலகம் - 23.08.2023 அன்று விழுப்புரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு - காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களுடன் திடீர் ஆய்வு - புகார் கொடுத்தல் - தொடர்பாக: பார்வை: திடீர் ஆய்வு மகஜர் நாள்:24.08.2023 விழுப்புரம் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலரான திருமதி.சுமித்ரா ஆகிய நான் 23.08.2023-ம் தேதி எனது அலுவலகத்தில் பணியில் இருந்தபோது விழுப்புரம் மாவட்டம் மயிலம் சார்பதிவ்வாளர் அலுவலகத்தில் பத்திர பதிவுக்கு வரும் பொது மக்களிடம் ஆவண எழுத்தர் மூலமும், புரோக்கர் மூலமும் இலஞ்சம் பெறுவதாக எனக்கு கிடைத்த நம்பகமான தகவலின் அடிப்படையில் நான் விழுப்புரம் ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவுக்கு சென்று அங்கு பணியில் இருந்த திரு.க.சத்தியராஜ், காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களிடம், மயிலம் சார்பதிவாளர் அலுவலகத்தை திடீராய்வு செய்வது குறித்து கலந்தாலோசித்து அதன்படி நானும் ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு காவல் குழுவினரும் உடனடியாக இரண்டு அரசு (Continued in separate sheet)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ........................... பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ......................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

24.08.2023

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
24.08.2023 at 17.00 hrs.

Name: பெயர் K. Sathiyaraj
Rank: நிலை DSP VAC No. எண் ..........
Villupuram (FAC)

வாகனங்களில் புறப்பட்டு சுமார் 19.40 மணியளவில் மயிலம் சார்பதிவளர் அலுவலகத்தினுள் சென்று அங்கு இருந்தவர்களிடமும், சார்பதிவாளர் அவர்களிடமும் எங்களை அறிமுகப்படுத்திக் கொண்டு அவர்களிடம் அலுவலகத்தை திடீராய்வு செய்யப்போவதாக தெரிவித்துவிட்டு பின்னர், அவர்கள் முன்னிலையில் எங்களை சுய பரிசோதனை செய்த பின்பு மேற்படி அலுவலகத்தில் உள்ளவர்களையும், அலுவலகத்தையும் சோதனை செய்தபோது, அலுவலகத்தில் பின்னர் தெரிந்த 1) உதவியாளர் மற்றும் பொறுப்பு சார்பதிவாளர் திருமதி.P.S.சங்கீதா அவர்கள் சார்பதிவாளர் இருக்கைக்கு வலது புறத்தில் கண்ணாடியால் தடுக்கப்பட்டிருந்த கணினி அறையில் தெற்கு நோக்கி போடப்பட்டிருந்த நாற்காலியில் அமர்ந்திருந்தார். அவரது வலதுபுறத்தில் 2) Zigma என்ற தனியார் நிறுவனத்தின் மூலம் டேட்டா என்ட்ரி ஆப்ரேட்டராக பணிபுரியும் திருமதி.இரா.லட்சுமி என்பவர் கிழக்கு நோக்கி போடப்பட்டிருந்த நாற்காலியில் அமர்ந்திருந்தார். சார்பதிவாளருக்கு பின்புறம் வடக்கு நோக்கி போடப்பட்டிருந்த நாற்காலியில் 3) Zigma என்ற தனியார் நிறுனத்தின் மூலம் கேமரா ஆப்பரேட்டர் பணிபுரியும் திரு.D.முகிலன் என்பவர் அமர்ந்திருந்தார், சார்பதிவாளருக்கு அருகில் 4) திருமதி.S.உமாமகேஸ்வரி, Manual EC worker என்பவர் நின்றிருந்தார், சார்பதிவாளர் இருக்கைக்கு நேர் எதிரே 5) திரு.S.ராஜேந்திரன், அலுவலக உதவியாளர் என்பவர் நின்றிருந்தார். சார்பதிவாளர் இருக்கைக்கு நேர் எதிரே நின்றிருந்த 6) Zigma என்ற தனியார் நிறுவனத்தின் மூலம் கணினி பழுது நீக்கம் செய்பவராக பணிபுரியும் திரு.சுரேஷ், த/பெ சீனுவாசன் என்பவர் நின்றிருந்தார். சார்பதிவாளர் இருக்கைக்கு எதிரே பத்திரப்பதிவு செய்யும் இடத்தில் தனி நபர்களான 7) திரு.R.பாலமணிகண்டன், த/பெ ராமலிங்கம், 8) திரு.விஜய்ஆனந்த், த/பெ.பராமானந்தம், 9) R.விநாயகம், த/பெ ராமானுஜம் மற்றும் 10) R.செல்வம், த/பெ ராதாகிருஷ்ணன் ஆகியோர் நின்றிருந்தனர். அதன் பிறகு நான், மேற்படி நபர்களை அவரவர்கள் இடத்தில் இருக்கும்படி அறிவுறுத்தினேன். பின்னர் எனது அறிவுறுத்தலின்படி காவல் குழுவினர் மேற்படி அலுவலகத்தையும், அங்கிருந்தவர்களையும் சோதனை செய்தபோது கீழ் கண்டவகையில் கணக்கில் வராத தொகை கைப்பற்றப்பட்டது. <u>திடீராய்வின்போது கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத ரொக்கப் பணம் விவரம்:</u> 1) லுவலகத்தில் இருந்த உதவியாளர் மற்றும் பொறுப்பு சார்பதிவாளர் திருமதி.P.S.சங்கீதா அவர்களை ஒரு பெண் காவலர் உதவியுடன் சோதனை செய்ய அவரது கைப்பையில் (500 X 9) ரூபாய்.4,500/- பணம் இருந்தது. மேற்படி தொகை குறித்து அவரிடம் கேட்க அவர் எந்தவித முகாந்திரமும் தெரிவிக்காததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. 2) மேலும் அலுவலகத்தில் இருந்த Zigma என்ற தனியார் நிறுவனத்தின் மூலம் டேட்டா என்ட்ரி ஆப்ரேட்டராக பணிபுரியும் திருமதி.இரா.லட்சுமி என்பவரை ஒரு பெண் காவலர் உதவியுடன் சோதனை செய்ததில் அவரிடம் (500 X 1, 200 X 3, 100 X 7) ரூ.1800/- இருந்தது. அந்த தொகையை குறித்து விசாரிக்க, அவர் மேற்படி தொகைக்கு சரியான முகாந்திரம் தெரிவிக்காததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. 3) அலுவலகத்தில் இருந்த Zigma என்ற தனியார் நிறுவனத்தின் மூலம் கேமரா ஆப்பரேட்டர் பணிபுரியும் திரு.D.முகிலன் என்பவரை சோதனை செய்ததில் அவரிடம் (500 X 4, 200 X 4, 100 X 10) ரூபாய்.3800/- இருந்தது. அந்த தொகையை குறித்து விசாரிக்க, அவர் மேற்படி தொகைக்கு சரியான முகாந்திரம் தெரிவிக்காததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது அதன் விபரம். 4)அலுவலகத்தில் இருந்த Manual EC பணி செய்யும் தனி நபரான திருமதி.S.உமாமகேஸ்வரி என்பவரை ஒரு பெண் காவலர் உதவியுடன் சோதனை செய்ததில் அவரிடமிருந்து (500 X 3, 100 X 3) ரூ.1,800/- கைப்பற்றப்பட்டது. அந்த தொகையை குறித்து விசாரிக்க, அவர் மேற்படி தொகைக்கு சரியான முகாந்திரம் தெரிவிக்காததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. 5) அலுவலகத்தில் இருந்த திரு.S.ராஜேந்திரன், அலுவலக உதவியாளர் என்பவரை காவலர் உதவியுடன் சோதனை செய்ததில் அவரிடம் (500 X 11, 200 X 1, 100 X 12) ரூபாய்.6,900/- இருந்தது. அந்த தொகையை குறித்து விசாரிக்க, அவர் மேற்படி தொகைக்கு சரியான முகாந்திரம் தெரிவிக்காததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. 6) அலுவலகத்தில்

இருந்த Zigma என்ற தனியார் நிறுவனத்தின் மூலம் கணினி பழுது நீக்கம் செய்பவராக பணிபுரியும் திரு.சுரேஷ், த/பெ சீனுவாசன் என்பவரை காவலர் உதவியுடன் சோதனை செய்ததில் அவரிடம் (500 X 9, 200 X 8, 100X 3) ரூபாய்.6,400/- இருந்தது. அந்த தொகையை குறித்து விசாரிக்க, அவர் மேற்படி தொகைக்கு சரியான முகாந்திரம் தெரிவிக்காததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.7) பின்னர், அலுவலகத்தில் இருந்த திரு.விஜய்ஆனந்த், த/பெ.பராமானந்தம் என்ற தனிநபரை காவலர் உதவியுடன் சோதனை செய்ததில் அவரிடம் (500 X 42, 200 X 3, 100 X 1) ரூ.21,700/- இருந்தது. மேற்படி தொகையை குறித்து கேட்க, அவர் தன்னிடம் வரும் பொதுமக்களின் பத்திரப்பதிவினை பதிவு செய்தற்கு மயிலம் சார் பதிவாளர் சங்கீதா அவர்களுக்கு கொடுப்பதற்காக வைத்திருந்த இலஞ்ச பணம் என்று கூறினார். அதனால் மேற்படி தொகையினை விசாரணைக்காக கைப்பற்றினேன். 8) பின்னர், அலுவலகத்தில் இருந்த R.விநாயகம், த/பெ ராமானுஜம் என்ற தனிநபரை காவலர் உதவியுடன் சோதனை செய்ததில் அவரிடம் (500 X 7, 200 X 6, 100 X 17, 50 X 10, 20 X 10) ரூ.7,100/- இருந்தது. மேற்படி தொகையை குறித்து கேட்க, அவர் தன்னிடம் வரும் பொதுமக்களின் பத்திரப்பதிவினை பதிவு செய்தற்கு மயிலம் சார் பதிவாளர் சங்கீதா அவர்களுக்கு கொடுப்பதற்காக வைத்திருந்த இலஞ்ச பணம் என்று கூறினார். அதனால் மேற்படி தொகையினை விசாரணைக்காக கைப்பற்றினேன். 9) பின்னர், அலுவலகத்தில் இருந்த R.செல்வம், த/பெ ராதாகிருஷ்ணன் என்ற தனிநபரை காவலர் உதவியுடன் சோதனை செய்ததில் அவரிடம் (500 X 2) ரூ.1,000/- இருந்தது. மேற்படி தொகையை குறித்து கேட்க, அவர் தன்னிடம் வரும் பொதுமக்களின் பத்திரப்பதிவினை பதிவு செய்தற்கு மயிலம் சார் பதிவாளர் சங்கீதா அவர்களுக்கு கொடுப்பதற்காக வைத்திருந்த இலஞ்ச பணம் என்று கூறினார். அதனால் மேற்படி தொகையினை விசாரணைக்காக கைப்பற்றினேன். 10) பின்னர், அலுவலகத்தில் இருந்த திரு.R.பாலமணிகண்டன், த/பெ ராமலிங்கம் என்பவரை சோதனை செய்ததில் அவரிடமிருந்து ரூ.31,700/- இருந்தது. அந்த தொகையை குறித்து விசாரிக்க, மயிலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் கேமரா ஆப்ரேட்டராக பணிபுரியும் முகிலன் என்பவர் புதிய அலுவலக கட்டிடத்திற்கு அலுவலக கோப்புகளை இடமாற்றம் செய்ய சொல்லி தன்னிடம் ரூபாய். 10,000/- கொடுத்ததாக கூறினார். உடனே அலுவலகத்தில் இருந்த மேற்படி முகிலனிடம் இது குறித்து விசாரிக்க தான் இது போன்ற பணிக்காக எந்த தொகையும் பாலமணிகண்டனிடம் வழங்கவில்லை என்று கூறினார். அதன்பிறகு பாலமணிகண்டனிடம் மீண்டும் இது குறித்து விசாரணை செய்த போது அவர், சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வலதுபுறம் சுமார் 50 மீட்டர் தொலைவில் CC காமன் சர்வீஸ் சென்டர் என்ற பெயரில் பொது இ சேவை மையம் நடத்தி வருவதாகவும், மேற்படி இ சேவை மையத்தில் செய்த பணிக்காக பொது மக்கள் கொடுத்த தொகை என்று கூறினார். மேற்படி அவர் தெரிவித்த காரணங்கள் முன்னுக்கு பின் முரணாகவும், சந்தேகத்திற்கு இடமளிக்கும் வகையில் இருந்ததாலும் பாலமணிகண்டனை நான், காவல் துணை கண்காணிப்பாளர் மற்றும் காவல் குழுவினருடன் மயிலம் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வலதுபுறம் சுமார் 50 மீட்டர் தொலைவில் இருந்த அவரது பொது இ சேவை மையத்திற்கு அழைத்து சென்று அவ்வலுவலகத்தை சோதனை செய்த போது, அங்கு கிழக்கு நோக்கி இருந்த அவரது இருக்கைக்கு எதிரே இருந்த மேஜையின் டிராயரில் காக்கி நிறம் கொண்ட நான்கு சிறிய கவர்கள் இருந்தது. அந்த கவர்களை சோதனை செய்ததில், முதல் கவரில் (500 X 43) ரூபாய்.21,500/- ம், இரண்டாவது கவரில் (500 X 44) ரூபாய்.22,000/- ம், மூன்றாவது கவரில் (500 X 36) ரூபாய்.18,000/- ம் மற்றும் நான்காவது கவரில் (500 X 55) ரூபாய்.27,500/- ம் ஆக மொத்தம் ரூபாய்.89,000/- இருந்தது. பின்பு அவரது இருக்கைக்கு அருகில் இருந்த மற்றொரு மேஜையின் மீது இருந்த கருப்பு நிற லெதர் கைப்பையினை சோதனை செய்த போது அதில் (500 X 301, 200 X 55, 100 X 132) ரூபாய்.1,74,700/- இருந்தது. மேற்படி தொகைகள் குறித்து விசாரித்த போது மயிலம் சார்பதிவாளர் திருமதி.சங்கீதா அவர்கள் பத்திர பதிவுக்கு வரும் பொது மக்களிடம் ஆவண எழுத்தர்கள் மூலமும்

புரோக்கர்கள் மூலமும் இலஞ்சமாக பெற்ற தொகையினை என்னிடம் கொடுத்து வைப்பார் என்றும் அத்தொகையினை அவர் பணி முடித்து வீட்டிற்கு செல்லும் முன் வாங்கி செல்வார் என்றும், ஆனால் இன்று அவர் பணி முடித்து புறப்பட கால தாமதமானதால் இதுவரை இந்த இலஞ்ச பணத்தை அவரிடம் வழங்காமல் நானே வைத்திருந்தேன் என்று கூறியதால் மேற்படி தொகையை இலஞ்ச தொகையாக கருதி விசாரணைக்காக கைப்பற்றினேன். அதன் பின்னர் திரு.பாலமணிகண்டன் தனது பொது இ சேவை மையத்தில் பராமரித்து வரும் ஆவணங்களான 1) CSC எனக் குறிப்பிடப்பட்டிருக்கும் AEPS Cash Withdrawal Note (Total pages 1 to 272, in which pages 1 to 80 and 237 to 272), 2) Khaleel என்று அச்சடிக்கப்பட்ட இரண்டு CSC Accounts Note (Total pages 1 to 126, and pages Note 1 to 132) மற்றும் 3) முருகன் படம் அச்சிடப்பட்ட SUN தமிழ் டைரி 2023 (Pages 1 to 408) ஆகியவற்றை விசாரணைக்காக கைப்பற்றினேன். அதன்பின்னர் நான், காவல் துணை கண்காணிப்பாளர் மற்றும் காவல் குழுவினருடன் பாலமணிகண்டனை அவரது இ சேவை மையத்திலிருந்து அழைத்து கொண்டு மீண்டும் மயிலம், சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வந்தேன். அதன் பின்பு மயிலம் சார் பதிவாளர் அலுவலகத்தை சோதனை செய்தபோது, சார் பதிவாளர் திருமதி.சங்கீதா அவர்கள் இருந்த கண்ணாடியால் தடுக்கப்பட்ட கணினி அறையில் அவருக்கு எதிரே இருந்த கணினி மேஜையின் Key Board-ன் கீழ் (500 X 14. 200 X 1, 100 X 1) ரூபாய்.7,300/- இருந்தது. மேற்படி தொகை குறித்து அங்கு இருந்தவர்களிடம் விசாரிக்க யாரும் உரிமை கோராததால் அந்த பணத்தை கணக்கில் வராத தொகையாக கருதி விசாரணைக்காக கைப்பற்றினேன். அதன் பின்னர் அதே கணினி மேஜையின் கீழே சோதனை செய்தபோது (500 X 5, 200 X 1, 100 X 6, 50 X 2) ரூபாய்.3400/- இருந்தது. மேற்படி தொகை குறித்து அங்கு இருந்தவர்களிடம் விசாரிக்க யாரும் உரிமை கோராததால் அந்த பணத்தை கணக்கில் வராத தொகையாக கருதி விசாரணைக்காக கைப்பற்றினேன். அதன் பின்னர், மயிலம் சார் பதிவகத்தில், சார் பதிவாளர் இருக்கை இருக்கும் அறை, ஆவணங்கள் இருக்கும் முதலாவது மற்றும் இரண்டாவது பதிவறைகள், சார் பதிவாளர் அலுவலக வராண்டா, சார் பதிவாளர் அலுவலக வெளிப்புற வளாகம் ஆகியவற்றினை சோதனை செய்ததில் கைப்பற்றக்கூடிய பொருளோ, பணமோ ஏதும் இல்லை. இந்த திடீராய்வின்போது மேற்படி வகையில் கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத மொத்த தொகை ரூ.3,61,100/- (ரூபாய் மூன்று லட்சத்து அறுபத்து ஓராயிரத்து நூறு மட்டும்) ஆனது பத்திரப்பதிவுக்கு வரும் பொதுமக்களிடம் இருந்து இலஞ்சமாக பெற்றிருக்க கூடும் என விசாரணையில் தெரிய வருவதால் மேற்படி தொகையினை மேல் விசாரணைக்காக கைப்பற்றினேன். பின்பு அலுவலத்தில் இருந்த பதிவேடுகளான A கணக்குப் பதிவேடு, மற்றும் G, H கணக்கு பதிவேடுகளை சரிபார்க்க பதிவேட்டினை பார்வையிட்ட போது பதிவேடுகளில் குறிப்பிட்டுள்ள தொகைகள் அனைத்தும் ஆன்லைன் மூலம் பெறப்பட்டுள்ளது. ரொக்கமாக எந்த தொகையும் இவ்வலுவலகத்தில் பெறப்படவில்லை. மேலும் விசாரணைக்காக அலுவலக நிரந்தர பணியாளர்கள் வருகைப்பதிவேடு-2023, தொகுப்பு ஊதிய பணியாளர்கள் வருகைப்பதிவேடு-2023, தனி நபர் பண இருப்பு பதிவேடு-2023 மற்றும் இயக்கப்பதிவேடு-2023 ஆகியவை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பிறகு அலுவலகத்தில் இருந்த சார்பதிவாளர், அலுவலக பணியாளர்கள் மற்றும் அலுவலகத்தினுள் இருந்தவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. இந்த திடீராய்வின்போது அலுவலர்கள் கண்ணியத்துடன் நடத்தப்பட்டார்கள். அலுவலக பெண் ஊழியர்கள் விழுப்புரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு பெண் காவலர் ஒருவர் உதவியுடன் விசாரணை செய்யப்பட்டார்கள். மேலும் அலுவலக உடமைகளுக்கு எவ்வித சேதங்களும் ஏற்படுத்தப்படவில்லை என்பது உறுதி செய்யப்பட்டது. இந்த திடீராய்வு மகசர் இன்று 23.08.2023-ம் தேதி இரவு 19.40 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு 24.08.2023-ம் தேதி காலை சுமார் 07.15 மணிக்கு முடிக்கப்பட்டது. மேற்படி சம்பவங்கள் அனைத்தும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள திடீர் ஆய்வு மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த திடீராய்வின்போது கைப்பற்றப்பட்ட இலஞ்ச தொகை மற்றும் மயிலம் சார் பதிவாளர் அலுவலகத்தில்

கண்டெடுக்கப்பட்ட கணக்கில் வராத தொகைகள் மொத்தம் ரூபாய்.3,61,100/- அளவிற்கு கைப்பற்றப்பட்டது சம்மந்தமாக நான் கொடுத்த புகாரின் பேரில் சம்மந்தப்பட்ட அலுவலர்களான 1) திருமதி.P.S.சங்கீதா, உதவியாளர் மற்றும் பொறுப்பு சார் பதிவாளர், மயிலம், விழுப்புரம் மாவட்டம், 2) திரு.S.ராஜேந்திரன், அலுவலக உதவியாளர், சார்பதிவாளர் அலுவலகம், மயிலம், திண்டிவனம் வட்டம், விழுப்புரம் மாவட்டம், 3) திரு.R.பாலமணிகண்டன், த/பெ.ராமலிங்கம், (தனி நபர்), நெ.27, காமராஜர் நகர், மயிலம், திண்டிவனம் தாலுக்கா, விழுப்புரம் மாவட்டம். 4) திரு.S.சுரேஷ், த/பெ.சீனுவாசன், System Service Operator, சார்பதிவாளர் அலுவலகம், மயிலம், திண்டிவனம் வட்டம், விழுப்புரம் மாவட்டம், 5) திரு.P.விஜயானந்த், த/பெ.பரமானந்தம், (தனி நபர்), மெயின் ரோடு, அணிலாடி கிராமம் மற்றும் அஞ்சல், செஞ்சி தாலுக்கா, விழுப்புரம் மாவட்டம் மற்றும் 6) திரு.R.விநாயகம், த/பெ.ராமானுஜம், (தனி நபர்), நெ.1/37, பெருமாள் கோயில் தெரு, மயிலம் கிராமம், திண்டிவனம் தாலுக்கா, விழுப்புரம் மாவட்டம் ஆகியோர் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறது. தங்கள் உண்மையுள்ள, (ஒப்பம்) XXXX மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்கள், கடலூர். இணைப்பு: 1. திடீர் ஆய்வு மகஜர் நாள். 24.08.2023. 2. ரொக்கம் ரூபாய் 3,61,100/-. 3. 10 நபர்களின் வாக்குமூலங்கள். 4.மயிலம் சார் பதிவாளர் அலுவலக நிரந்தர பணியாளர்கள் வருகைப்பதிவேடு-2023, 5. தொகுப்பு ஊதிய பணியாளர்கள் வருகைப்பதிவேடு-2023, 6. தனி நபர் பண இருப்பு பதிவேடு-2023 மற்றும் இயக்கப்பதிவேடு-2023. 7. CSC எனக் குறிப்பிடப்பட்டிருக்கும் AEPS Cash Withdrawal Not (Total pages 1 to 272, in which pages 1 to 80 and 237 to 272), 8. Khaleel என்று அச்சடிக்கப்பட்ட இரண்டு CSC Accounts Note (Total pages 1 to 126, and pages Note 1 to 132) மற்றும் 9. முருகன் படம் அச்சிடப்பட்ட SUN தமிழ் டைரி 2023 (Pages 1 to 408).

Madam,

Received the above computer typed complaint on 24.08.2023 at about 13.00 hrs. Hence, I registered a case in Viluppuram Vigilance and Anti-Corruption Cr.No.4/2023/AC/VPM u/s 7 of The Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 r/w 102 Cr.P.C. at 15.30 hrs today on 24.08.2023 and took up for Investigation.sd xxxxxx on 24.08.2023 (K.Sathiyaraj) Deputy Superintendent of Police, V&AC, VPM).

The original FIR along with the original computer typed complaint in a sealed cover are sent to the Special Judge for cases under The Prevention of Corruption Act, Viluppuram and a copy of FIR is submitted to the Director of Vigilance and Anti-Corruption, Chennai.

24.08.2023

(K.Sathiyaraj)
Deputy Superintendent of Police,
Vigilance and Anti-Corruption,
Viluppuram.